**கவனிக்க.**- *2023.08.04 ஆந் திகதிய 2344 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2345 - 2023 අගෝස්තු මස 11 වැනි සිකුරාදා - 2023.08.11

*2345 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1260 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, ஓகத்து மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1471-B 82481-5,441 (2023/08)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## தேர்தல் ஆணைக்குழு

தேர்தல் ஆணைக்குழுவின் நிறைவேற்றுநர் சேவை வகுதியைச் சேர்ந்த சட்ட அலுவலர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2023

தேர்தல் ஆணைக்குழுவின் நிறைவேற்றுநர் சேவை வகுதியின் தரம் III சட்ட அலுவலர் பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்பு முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களில் தேர்தல் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தகுதிகள் குறித்து மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக் குழாமொன்றினால் நடாத்தப்படும் தகுதிகள் குறித்து மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் அபேட்சகர்கள் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட (06 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட) புள்ளி வழங்கல் நடைமுறைக்கமைய தகுதிகள் குறித்து மதிப்பீடுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனம் அமுலுக்கு வரும் திகதி, தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

02. **தேவைப்படும் தகைமைகள் :**

I. **கல்வி/தொழில் தகைமைகள் :**

உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

II. **அனுபவம் :**

உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் மூன்று (03) ஆண்டுகளுக்குக் குறையாத செயலூக்கமுள்ள தொழில்சார் அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.
*(முனைப்பான தொழில்சார் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட காலம், திகதி மற்றும் பதவி இலச்சினை என்பவற்றை தெளிவாகக் குறிப்பிட்டு நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.)*

அல்லது

உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் அரசாங்க நிறுவனமொன்றில் சட்டத்துறையில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாதவொரு காலத்திற்கு பின்வரும் கருமங்களில் அனுபவம் பெற்றிருத்தல்.

(அ) வழக்குகள் சம்பந்தமான சட்ட நடவடிக்கைகளிலும் சட்ட மாஅதிபர் திணைக்களத்துடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்.

(ஆ) ஒப்பந்தங்கள் சம்பந்தமான சட்ட அலுவல்கள்.

(இ) ஏற்புடைய சட்டதிட்டங்கள் தொடர்பான சட்ட அலுவல்கள்.

(ஈ) சட்டமூலங்கள், சுற்றறிக்கைகள், ஒழுங்குவிதிகள் போன்ற சட்ட ஆவணங்களைத் தயாரிக்கும் அலுவல்கள்.

(உ) பல்வேறு நியதிச்சட்ட நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் சட்ட அல்லது நீதிமுறை நடவடிக்கைகள் அல்லது விசாரணை நடவடிக்கைகள்.

(இவ் விடயங்கள் செயலாளர், திணைக்களத் தலைவரினால் வெளியிடப்பட்ட சான்றிதழொன்றின் மூலமும் ஆவணங்களின் மூலமும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

III **உடல் தகைமைகள்.-**

அபேட்சகர்கள் அனைவரும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

IV **பிற தகைமைகள்.-**

- இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பங்கோரலுக்கான இறுதித் திகதியன்று பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகளை எல்லா வகையிலும் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

3. **பணியில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்.-**

(i) இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். உமக்குரிய ஓய்வூதியத் திட்டம் பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்துக்கு தாங்கள் கட்டுப்பட்டவராவீர்கள். தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது பணிக்கப்படுகின்றவாறு தங்களினால் அதற்காக உதவுதொகை செலுத்தப்படுதல் வேண்டும்.

(ii) இந்த நியமனம் மூன்று (03) ஆண்டுகளைக் கொண்ட ஒரு நன்னடத்தை காலத்துக்கு உட்பட்டதாகும். பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மூன்று (03) ஆண்டு காலத்துள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆந் திகதிய 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய உரிய மற்றைய அரச கரும மொழியில்/அரசகரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் இந்நியமனம் கட்டுப்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்பதுடன், தாங்கள் நியமனம் பெறத் தகுதி பெறும் மொழி மூலம், தங்களது விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலமாகும்.

4. **வயதெல்லை.-** விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.-** 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கமைய இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,615.00 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895.00 (SL -1- 2016) ஆகும்.

6. தகுதிகள் குறித்து மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் புள்ளி வழங்கல் முறை பின்பற்றப்படும் :

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | உச்சமட்ட புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | **25** |
| | (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட சட்டப் பட்டப்பின் படிப்பு | 25 | |
| | (ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட சட்டம் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கல்வி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | 20 | |
| | (iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட | | |
| | • முதலாம் வகுப்பு சித்தியுடன்கூடிய சட்டமாணிப் பட்டம் | 15 | |
| | • இரண்டாம் வகுப்பு மேல் நிலை சித்தியுடன்கூடிய சட்டமாணிப் பட்டம் | 10 | |
| | • வகுப்பு சித்தியொன்றுடன்கூடிய சட்டமாணிப் பட்டம் | 07 | |
| | • சாதாரண சித்தியுடன்கூடிய சட்டமாணிப் பட்டம் | 05 | |
| | (iv) சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டில் முதலாம் வகுப்பு சித்தி | 10 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டில் இரண்டாம் வகுப்பு சித்தி | 05 | |
| | **குறிப்பு** I : சட்டக் கல்லூரியில் இறுதிப் பரீட்சையில் சிறப்பு சித்தியொன்றுடன் சித்தியடைந்திருப்பின் மாத்திரம் மேற்குறிப்பிட்ட 05 புள்ளிகள் வழங்கப்படும். | | |
| | **குறிப்பு** II : உயர் தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 02. | **மேலதிக தொழில்சார் அனுபவம் :** | | **35** |
| | விண்ணப்பம் கோருவதற்கான அறிவித்தலின் 2 (ii) இல் குறிப்பிடப்படும் தன்மை வாய்ந்த மேலதிக அனுபவம் (அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவைப்படும் 03 ஆண்டு கால அனுபவம் தவிர) | | |
| | - ஓராண்டுக்கு 07 புள்ளிகள் வீதம் உச்சளவு : 35 புள்ளிகள் | | |
| | - 06 மாதங்களுக்குக் கூடிய/ஓராண்டுக்குக் குறைந்த காலத்திற்கு : 03 புள்ளிகள் | | |
| | • 15 ஆண்டுகளுக்கு குறையாதவொரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இச்சேவைக் காலம் (விண்ணப்பதாரி சார்பாக வழங்கப்படும் சான்றிதழிலேயே குறிப்பிடப்படுதல் வேண்டும்.) சட்டத்தரணி யொருவரிடமிருந்து அல்லது நீதிச் சேவை அலுவலரொருவரிடமிருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழொன்றின் மூலம் மேலதிக அனுபவம் நிரூபிக்கப்படுதல் வேண்டும். | | |
| | • அரச அல்லது தனியார்துறை அலுவலரொருவர் மேற்குறிப்பிட்ட தகைமை களைப் பூர்த்திசெய்திருப்பது, சட்டப் பதவியொன்றில் சேவையாற்றும் காலத்தில் என்பது குறித்த திணைக்கள/ தாபனத் தலைவரின் சேவைச் சான்றிதழொன்றின் மூலம் நிரூபிக்கப்படுதல் வேண்டும். | | |

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | உச்சமட்ட புள்ளிகள் |
|---|---|---|---|
| 03 | **தகவல் தொழில்நுட்பவியல் அறிவு** | | **10** |
| | (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டமொன்றுக்காக தகவல் தொழில்நுட்பவியலை அல்லது கணினியியலை பிரதான பாடமொன்றாக கற்றிருத்தல். | 10 | |
| | (ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியிலிருந்து அல்லது வேறு அரச அங்கீகாரம் பெற்ற தொழில்சார் நிறுவனமொன்றில் இருந்து பெற்றுக்கொண்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறை டிப்ளோமாவொன்று. | 08 | |
| | (iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்றுக்கொண்ட கணினியியல் அல்லது தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது வேறு நிறுவனமொன்றில் இருந்து பெற்றுக்கொண்ட கணினியியல் அல்லது தகவல் தொழில்நுட்பவியல் பற்றிய NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமாவொன்று. | 05 | |
| | (iv) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியில் இருந்து அல்லது வேறு அரச அங்கீகாரம் பெற்ற பயில்நிலை/தொழில்சார் நிறுவனமொன்றில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் கற்கைநெறிகளைத் தொடர்ந்து/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்து கொண்டு பெற்றுக்கொண்ட சான்றிதழ்கள். (சான்றிதழொன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது இரண்டு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.) | 04 | |
| | (**குறிப்பு** : மிக உயர்மட்ட தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) | | |
| 04 | **மொழியாற்றல்** | | **15** |
| | (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து ஆங்கில மொழியை பிரதான பாடமொன்றாக உள்ளடக்கி பெற்றுக்கொண்ட பட்டம். | 15 | |
| | (ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து சட்டம் பற்றிய பட்டப்பின்படிப்பொன்றை ஆங்கில மொழி மூலம் கற்றிருத்தல் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டப் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவொன்றை ஆங்கிலமொழி மூலம் கற்றிருத்தல். | 12 | |
| | (iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து ஆங்கில மொழிக்கு பெற்றுக்கொண்ட டிப்ளோமாவொன்று அல்லது வேறு நிறுவனமொன்றிலிருந்து ஆங்கிலமொழிக்கு பெற்றுக்கொண்ட NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமாவொன்று. | 10 | |
| | (iv) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் (உள்நாட்டு அல்லது இலண்டன்) ஆங்கில மொழியில் ஆகக் குறைந்தது அதிதிறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல் அல்லது IELTS (Academic) மொத்தப் புள்ளிகள் 6.5 அல்லது அதற்கு மேற்பட்டதாக TOEFL - BT 79 அல்லது அதற்கு மேற்பட்டதாக TOEFL - CBT 213 அல்லது அதற்கு மேற்பட்டதாக TOEFL - PBT 550 அல்லது அதற்கு மேற்பட்டதாக இருத்தல். | 08 | |
| | (v) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து ஆங்கில மொழிக்கு பெற்றுக்கொண்ட உயர் சான்றிதழொன்று அல்லது வேறு நிறுவனமொன்றில் இருந்து ஆங்கில மொழிக்கு பெற்றுக்கொண்ட NVQ 4 மட்ட சான்றிதழொன்று. | 05 | |
| | (**குறிப்பு** : மிக உயர்மட்ட தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) | | |

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | உச்சமட்ட புள்ளிகள் |
|---|---|---|---|
| 05 | **நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை** | | **15** |
| | (i) பொது அறிவும் நுண்ணறிவும் | 05 | |
| | (ii) சட்டத்துறையின் நவீன போக்குகள் பற்றிய அறிவு | 05 | |
| | (iii) தெளிவாக கருத்தை வெளிப்படுத்தக்கூடிய ஆற்றலும் ஆளுமையும் | 05 | |
| **மொத்தம்** | | | **100** |

**குறிப்பு** : தகுதிகள் குறித்து மதிப்பீடுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களில் உரிய காலவரைகள் பற்றி குறிப்பிடப்படவில்லையெனில், அவ்வாறான சான்றிதழ்களுக்குரிய காலப்பகுதிகளை குறித்த நிறுவனத்தினால் எழுத்துமூலம் உறுதிப்படுத்திக்கொண்டு சமர்ப்பிப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். புள்ளிகள் வழங்கும்போது அவ்வாறு காலப்பகுதியொன்று குறிப்பிடப்படாத மற்றும் காலப்பகுதி உறுதி செய்யப்படாத சான்றிதழ்கள் குறித்து பரிசீலிக்கப்படமாட்டாது.

07. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம்**.- எல்லா வகையிலும் பூர்த்தியான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தகுதிகள் குறித்து மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின் போது அனைத்து சான்றிதழ்களின் மூலப் பிரதிகளையும் உரியவாறு அத்தாட்சிப்படுத்திய பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் ஆளடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட் பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை.

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

08. **விண்ணப்பிக்க வேண்டிய விதம்**.-

(i) விண்ணப்பங்களை 2023.09.01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், தேர்தல் ஆணைக்குழு, சரண மாவத்தை, இராஜகிரிய" என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அத்திகதிக்கு பிந்திக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப்படிவமொன்று இவ்வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை A4 அளவிலான காகிதத்தின் இருபக்கங்களையும் உபயோகித்து அதன் முதற் பக்கத்தில் இல. 01 முதல் இல. 04 வரையும், இரண்டாம் பக்கத்தில் இல. 05 முதல் இல. 10 வரையும், மூன்றாம் பக்கத்தில் இல. 11 முதல் இல. 12 வரையும் இருக்கக்கூடியதாக தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தில் அதனைப் பூரணப்படுத்துதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட அலுவலர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர் / சமாதான நீதவான் ஒருவர் /சத்தியப் பிரமாண ஆணையாளர் ஒருவர்/சட்டத்தரணி ஒருவர் / பிரசித்த நொத்தாரிசு ஒருவர் /முப்படைகளின் ஆணையிடும் அதிகாரமுள்ள அதிகாரி ஒருவர் அல்லது ரூபா 47,615.00 அல்லது அதற்கு கூடிய மாதாந்த திரட்டிய சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை தாம் சேவையாற்றும் திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணபப்படிவத்தைத் தழுவி அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய முறைப்பாடெதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

09. **பிழையான தகவல்களை வழங்குதல்.-** தங்களினால் அனுப்பி வைக்கப்படும் விண்ணபப்படிவத்தில் குறிப்பிடப்படும் யாதேனுமாரு தகவல் பிழையானதென்று அல்லது தவறானதென்று ஆட்சேர்ப்புக்கு முன்னர் கண்டறியப்படின், தங்களது அபேட்சகர் நிலை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பிழையான அல்லது தவறான ஒரு தகவல் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் கண்டறியப்படின் பணி நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. பதவி வெற்றிடத்தைப் பூரணப்படுத்தும் அல்லது பூரணப்படுத்தாமலிருக்கும் உரிமை, தேர்தல் ஆணைக்குழுவைச் சாரும்.

11. இவ் வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

12. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் சம்பந்தமாக அல்லது இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஏதும் பிரச்சினைக்குரிய நிலை ஏற்படுமாயின் அதுபற்றி தேர்தல் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.

தேர்தல் ஆணக்குழுவின் ஆணைப்படி,

ஹே.மு.தி.தி. ஹேரத்,
செயலாளர்.

தேர்தல் ஆணைக்குழு,
2023, ஓகத்து 07.

மாதிரி விண்ணபப்படிவம்

## தேர்தல் ஆணைக்குழுவின் சட்ட அலுவலர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2023

(அலுவலக பாவனைக்கு மட்டும்)

| | பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் |
|---|---|

உரிய இலக்கத்தை இந்த கூட்டினுள் எழுதவும்.
(சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4)

(**குறிப்பு** : விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்ற முடியாது.)

1.0 1.1 முழுப்பெயர் (திரு. /திருமதி/செல்வி) : ............................................................
(சிங்களத்தில்/தமிழில்) ............................................................

1.2 முழுப் பெயர் :............................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) ............................................................

1.3 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடனான பெயர் : ............................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) ............................................................
(உதாரணம் : GUNAWARDHANA M.G.B.S.K)

1.4 முதலெழுத்துக்களுடனான பெயர் : ............................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) ............................................................

2.0 முழுமையான முகவரி :

2.1 நிரந்தர வசிப்பிட முகவரி : ....................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.2 நிரந்தர வசிப்பிட முகவரி : ....................................................................................................
(சிங்களத்தில்/தமிழில்) :

2.3 நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் கடிதத்தை அனுப்ப வேண்டிய முகவரி : ....................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.4 தொலைபேசி இலக்கம் : ....................................................................................................

3.0 பால் நிலை : பெண் - 1 ☐ (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)
ஆண் - 0

4.0 விவாகநிலை : விவாகமானவர் - 1 ☐
விவாகமாகாதவர் - 2 (உரிய கூட்டினுள் குறிப்பிடவும்)

5.0 5.1 பிறந்த திகதி : ஆண்டு : ........................... மாதம் : ........................... திகதி : ...........................

5.2 விண்ணப்பம் கோரும் இறுதி நாளில் உள்ளவாறான வயது :
வருடங்கள் : ........................... மாதங்கள் : ...................... நாட்கள் :......................

5.3 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

6.0 நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தலுக்கு இணங்க பெற்றுக் கொண்டுள்ள தகைமைகள் பற்றிய விபரம்:

| தகைமைகள் | பெற்றுக்கொண்ட நிறுவனம் | பெற்றுக்கொண்டதிகதி/காலவரை |
|---|---|---|
| ............................. | ......................................... | ............................... |
| ............................. | ......................................... | ............................... |

7.0 உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்த ஆண்டு : ..................................................

8.0 விண்ணப்பம் கோருவதற்கான அறிவித்தலின் இல.06 இன் கீழான ஒவ்வொரு தகைமையைப் பெற்றுக் கொண்டமை தொடர்பான விபரங்கள்:

| தகைமைகள் | பெற்றுக்கொண்ட நிறுவனம் | பெற்றுக்கொண்டதிகதி/காலவரை |
|---|---|---|
| ............................. | ......................................... | ............................... |
| ............................. | ......................................... | ............................... |

1. மேலதிக கல்வித் தகைமைகள்:

| | | |
|---|---|---|
| ............................. | ......................................... | ............................... |
| ............................. | ......................................... | ............................... |

2. மேலதிக தொழில் தகைமைகள் :

| | | |
|---|---|---|
| ............................. | ......................................... | ............................... |
| ............................. | ......................................... | ............................... |

3. மேலதிக அனுபவம் :

| | | |
|---|---|---|
| ............................. | ......................................... | ............................... |
| ............................. | ......................................... | ............................... |

4. ஆங்கில மொழித் தேர்ச்சி :

| | | |
|---|---|---|
| .............................. | .......................................... | ............................... |
| .............................. | .......................................... | ............................... |

5. தகவல் தொழில்நுட்ப அறிவு:

| | | |
|---|---|---|
| .............................. | .......................................... | ............................... |
| .............................. | .......................................... | ............................... |

9.0 நீர் எவ்பொழுதாவது குற்றச்சாட்டொன்றுக்காக நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவரா?
("ஆம்" எனின் விபரங்களைத் தரவும்)

..............................................................................................................................................................................

10.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ் விண்ணபப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என்பதை உறுதிப்படுத்துவதுடன் என்னால் வழங்கப்பட்ட இவ்வெளிப்படுத்துகை உண்மைக்குப் புறம்பானதென நிரூபிக்கப்படுமாயின், நியமனம் கிடைக்க முன்னர் தகுதியற்றவன் ஆவேன் என்பதையும், நியமனம் கிடைத்த பின்னர் பணிநீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன் என்றும், எல்லா சட்டதிட்டங்களுக்கும் நான் கட்டுப்பட்டவனாவேன் என்பதையும் வெளிப்படுத்துகிறேன்.

............................
திகதி :...................... விண்ணப்பதாரரின் கையொப்பம்.

11.0 **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்** :

இவ் விண்ணபத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................. எனக்கு அறிமுகமானவர் என்பதையும், இன்றைய தினம் என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

...................................................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும் பதவி இலச்சினையும்.
பெயர் :...............................
பதவி :...............................
திகதி :...................................

9.0 **திணைக்களத் தலைவரின் சிபாரிசு** (தற்போது அரச நிறுவனமொன்றில் பணிபுரிபவர்களுக்கு ஏற்புடையது) :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள திரு./ திருமதி/ செல்வி ................................. இந்நிறுவனத்தில் பணிபுரிபவர் என்பதையும், அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்பதையும், வேலைகளும் வருகையும் திருப்திகரமானதாக உள்ளது என்பதையும், அவருக்கெதிராக எந்தவொரு குற்றச்சாட்டும் இல்லை என்பதையும், இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவாராயின் இந்நிறுவனத்தின் சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................................
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :...............................
பதவி :......................
முகவரி :.................
திகதி :..............................
(பதவி முத்திரையை பொறிக்கவும்)

08-595

## சனாதிபதி செயலகம்

### சனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்கான விண்ணப்பம் கோரல் - 2022/2023

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 33(உ) உறுப்புரையின் பிரகாரம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்காக சனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்கான தகைமைகளைக் கொண்ட நபர்களைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்காக 2021, நவெம்பர் மாதம் 24 ஆம் திகதிய 2255/24 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

01. i. இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராக;

ii. சட்டத் தொழில்துறையில் அதிசிறந்த நிலையை அடைந்துள்ளவராகவும், உயர்ந்த தரத்திலான நடத்தையையும் தொழில்சார் நேர்மையையும் பேணுபவராக;

iii.(அ) இலங்கையின் எந்நீதிமன்றத்திலேனும் சட்ட வாதாட்டங்களினூடாக முனைப்பான பங்களிப்பை வழங்கியுள்ள;

அல்லது

(ஆ) சட்டத்தின் மேம்பாட்டுக்காகச் சட்ட வாதாட்டங்களின் மூலம் முனைப்பான பங்களிப்பை வழங்கியுள்ள;

அல்லது

(இ) அரச துறையிலோ அல்லது இலங்கையிலோ அல்லது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்திலோ சிரேஷ்ட மட்டத்திலான சட்டவியல் நிபுணரொருவராக மிக விசேடமான அத்துடன் தலைசிறந்த பங்களிப்பை வழங்கியிருத்தல் அல்லது இலங்கைக்கான புகழை அல்லது பெருமதிப்பைப் பெற்றுக்கொடுத்துள்ள;

iv. நன்மதிப்பையும் நல்லொழுக்கத்தையும் கொண்டுள்ள;

v. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை மீறாத;

vi. சட்டத்தின் ஆட்சியை அல்லது நீதிமன்றத்தின் சுயாதீனத்தைச் சீர்குலைக்கும் அல்லது பாதிக்கும் எந்தவொரு செயலிலும் ஈடுபட்டிராத;

vii. உயர் நீதிமன்றத்தினால் அல்லது இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஏதேனும் ஒழுக்காற்றுக் கட்டளைக்கு ஆளாக்கப்படாத, நீதிமன்றமொன்றினால் தொழில்சார் துர்நடத்தைகள் அல்லது விடுபாடுகளுக்கு குற்றவாளியாக்கப்படாத, நீதிமன்ற அவமதித்தல் தொடர்பாக குற்றவாளியாக்கப்படாத, மோட்டார் வாகனப் போக்குவரத்துக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சிறியதொரு குற்றம் தவிர்ந்த உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நீதிமன்றமொன்றினால் எந்தவொரு குற்றத்துக்கும் குற்றவாளியாக்கப்படாத வங்குரோத்து நிலையில் இல்லாத;

viii. சனாதிபதி சட்டத்தரணியொருவராக நியமிப்பதற்காக அவரால் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட முன்னர் குறைந்தபட்சம் ஐந்து வருட காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரி செலுத்துநரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ள;

ஒரு நபராக இருத்தல்.

02. சட்டம் அத்துடன்/அல்லது சட்ட முறைமை பற்றிய நூல்களை அல்லது வெளியீடுகளை எழுதியிருத்தல், தேசிய சர்வதேச அல்லது மாநாடுகளில் பத்திரங்களைச் சமர்ப்பித்திருத்தல், அங்கீகரிக்கப்பட்ட தேசிய அல்லது சர்வதேச நிறுவனங்களில் சட்டத்துறையில் உயர் கற்கைளை மேற்கொண்டிருத்தல், அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களில் சட்டப் பாடத்தைக் கற்பித்திருத்தல், சட்டத்தின் புதுப்பரப்புகளில் இற்றைப்படுத்தப்பட்ட அறிவு பெற்றிருத்தல், இத்தொழில்துறைக்கு அர்த்தமான பங்களிப்பாற்றியுள்ள கனிஷ்ட சட்டத்தரணிகளைப் பயிற்றுவித்திருத்தல் ஆகியன சனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்படுவதற்கான மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

03. அவர் குறைந்தபட்சம் இருபது (20) வருட காலங்கள் இலங்கை உயர்நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராகப் பணியாற்றி யிருத்தல் வேண்டும். (விசேட சந்தர்ப்பங்களின் போது ஏனைய அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ள, பதினைந்து (15) வருட காலச் சேவையை கொண்டுள்ள இலங்கை உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணிகளும் சனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கக் கவனத்தில் கொள்ளப்படுவர்.)

04. விண்ணப்பதாரி ஒருவர் நொத்தாரிசு ஒருவராக சேவையில் ஈடுபட்டிருத்தல் ஒரு தகைமையீனமாக கருதப்படுவதுடன் விண்ணப்பதாரி மூலமாக நேரடியாக அல்லது மறைமுகமாக மூன்றாம் தரப்பினர் மூலம் உரிய விண்ணப்பம் தொடர்பில் அல்லது சனாதிபதி சட்டத்தரணியாக நியமித்தல் தொடர்பில் எந்தவொரு தலையீட்டையும் மேற்கொள்ளல் தகைமையின்மையாகக் கருதப்படும்.

05. எவரேனும் விண்ணப்பதாரி ஒருவர் தனது விண்ணப்பம் மூலம் தவறான தகவல் வழங்குதல் அல்லது போலி ஆவணம் சமர்ப்பித்தல் அல்லது விடயங்களை மறைத்திருப்பாராயின் அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக கருதப்படும்.

இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்தின் பிரகாரம் பூர்த்திசெய்யப்பட்ட எழுத்துமூல விண்ணப்பங்கள் ஏற்புடைய ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் 2023, ஒகத்து மாதம் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சனாதிபதியின் செயலாளர், சனாதிபதி அலுவலகம், கொழும்பு 01 எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்பட்டுள்ள கடிதவுறையின் இடப்பக்க மேல்மூலையில் "சனாதிபதி சட்டத்தரணிகளை நியமித்தல்-2023" எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை www.presidentsoffice.gov.lk மூலமாகவும் பதிவிறக்கம் செய்ய முடியும்.

ஈ. எம். எஸ். பி. ஏக்கநாயக்க,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு 01,
2023, ஒகத்து 09.

மாதிரி விண்ணப்ப படிவம்

சனாதிபதி சட்டத்தரணிகளை நியமித்தல் - 2022/ 2023

01. i. முழுப் பெயர் :-
ii. முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-

02. பிறந்த திகதி :-

03. தேசிய அடையாள அட்டை இல. :-

04. i. நிரந்தர முகவரி :-
ii. மின்னஞ்சல் முகவரி (email) :-

05. தொலைபேசி இலக்கம் :-
i. கையடக்க :-
ii. நிலையான :-

06. இலங்கைப் பிரசையா இல்லையா என்பது பற்றி :-

07. கல்வித் தகைமைகள் :-

| தகைமை | நிறுவனம் | பெற்றுக்கொண்ட ஆண்டு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

08. தொழில்சார் தகைமைகள் :-

i. இலங்கை உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த திகதி :-

ii. சட்டத்தரணியாக தொழில் புரிந்துள்ள நீதிமன்றங்கள் பற்றிய விபரம் :-

| நீதிமன்றத்தின் பெயர் | நீதிமன்ற அதிகார பிரதேசம் | கால எல்லை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

iii. ஏனைய தொழில்சார் தகைமைகள் :-

| தகைமை | நிறுவனம் | பெற்றுக்கொண்ட ஆண்டு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

09. இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினராக பதிவுசெய்திருப்பின்,

i. பதிவிலக்கம் :-
ii. கிளை :-
iii. மாவட்டம் :-

10. i. நொத்தாரிசு உரிமம் பெற்றிருப்பின் அதன் இலக்கம் :-

ii. நொத்தாரிசு ஒருவராக செயற்பட்டிருப்பின் / செயற்பட்டு வருவதாயின் அது பற்றிய விபரம் கால எல்லைகளுடன் :-

11. கடந்த 5 ஆண்டு காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரிசெலுத்துனராக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி,

i. பதிவிலக்கம் :-
ii. வரிசெலுத்தியுள்ளீரா என்பது பற்றி :-

12. மேலதிக தகைமைகள் :-

சனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் இரண்டாம் (02) பந்தியில் குறிப்பிடப்பட்ட மேலதிக தகைமைகளைப் பூர்த்திசெய்திருப்பின் மேலதிக தகைமைகள் தொடர்பான விபரங்களை வெவ்வேறாக இப்பந்தியின் கீழ் குறிப்பிடுதல் வேண்டும்.

13. ஏனைய தகைமைகள் :-

மேற்குறித்த விடயங்களுக்கு மேலதிகமாக சனாதிபதி சட்டத்தரணி ஒருவராக நியமிப்பதற்காக கருத்திற்கொள்ளப்பட முடியுமான வேறேதும் விடயங்கள் இருப்பின் இப்பந்தியின் கீழ் குறிப்பிடுதல் வேண்டும்.

14. தகவல்களை வினவ முடியுமான உறவினர் அல்லாத இரண்டு நபர்கள் தொடர்பான விபரம் :-

01. பெயர்:-
பதவி/தொழில் :-
தொலைபேசி இலக்கம் :-
மின்னஞ்சல் முகவரி :-

02. பெயர் :-
பதவி/தொழில் :-
தொலைபேசி இலக்கம் :-
மின்னஞ்சல் முகவரி :-

15. . . . (பெயர்) . . . ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பை மீறவில்லை எனவும், சட்டத்தின் ஆட்சியை அல்லது நீதிமன்றத்தின் சுதந்திரத்தை பாதிக்கும் அல்லது சீர்குலைக்கும் எந்தவொரு செயற்பாட்டிலும் ஈடுபடவில்லை எனவும், உயர் நீதிமன்றத்தினால் அல்லது இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஏதேனும் ஒழுக்காற்றுக் கட்டளைக்கு ஆளாக்கப்படவில்லை எனவும் மற்றும் நீதிமன்றமொன்றினால் தொழில்சார் துர்நடத்தைகள் அல்லது விடுபாடுகளுக்கு குற்றவாளியாக்கப்படவில்லை எனவும் மற்றும் நீதிமன்ற அவமதித்தல் தொடர்பாக குற்றவாளியாக்கப்படாத மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்துக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சிறியதொரு குற்றம் தவிர்ந்த உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நீதிமன்றமொன்றினால் எந்தவொரு குற்றத்துக்கும் குற்றவாளியாக்கப்படவில்லை எனவும், வங்குரோத்து நிலையில் இல்லாதவரென்றும் நன்மதிப்பையும் நல்லொழுக்கத்தையும் கொண்டுள்ளதாகவும், மேலே என்னால் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதுமெனவும், தேவையான தகவல்கள் மறைக்கப்படவில்லை எனவும் உறுதிப்படுத்தி வெளிப்படுத்துகின்றேன்.

திகதி : கையொப்பம்.

08-797

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.